மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆண்டுதோறும் வழங்கும் ஒருமுறை தான் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எங்காவது குறைபாடு இருந்தால் சுட்டிக்காட்டினால், அதை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமங்கலம் அரசினர் மருத்துவ மனை.

* 238 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் அரசினர் மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு நிலையம், எக்ஸ்ரே பகுதி, போன்றவை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திருமங்கலத்தில் இரத்த சேமிப்பு நிலையமும், எக்ஸ் கதிர் வீச்சு நிலையக் கட்டடமும் கட்டும் திட்டம் 1970-71 நிதியாண்டில் பரிசீலனைக்காக ஒத்திப் போடப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : வளர்ந்து வரும் மக்கள் தொகையைக் கருத்தில்கொண்டு திருமங்கலம் தாலுக்கா தலைநகரமாக இருப்பதால் ரத்த சேமிப்பு நிலையமும், எக்ஸ்-ரே நிலையமும் விரைவாக ஏற்பட என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலில் 1966-லேயே ரத்த நிலையம் ஏற்படுத்த முடிவு எடுக்கப்பட்டு பின்னர் ஒத்திவைக்கப்பட்டது. 1967-68-இல் எக்ஸ்-ரே நிலையம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்டது. 1968-69-ல் இந்த இரண்டையும் ஏற்படுத்த முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை அகதிகள்.

* 239 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கொடைக்கானலில் இலங்கை அகதிகளைக் குடியேற்றி விவசாயம் செய்வதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) & (இ) கொடைக்கானல் தாலுகாவிலுள்ள வண்டரவ் காட்டில் தேயிலைத் தோட்டம் அமைக்கும் யோசனை பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆ. கு. சுப்பையா : இலங்கையில் இருந்து இதுவரையிலும் எத்தனை அகதிகள் தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிறார்கள் ? அவர்கள் எங்கு எங்கு குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள் ?